<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>
**<u>O.S. No.84/2017</u>**

பெயர் : கண்ணகி

க/பெ. : விஸ்வநாதன்

தேதி : 10.02.2026.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.
**<u>D1, D2 தரப்பு குறுக்கு விசாரணை</u>**:–

எத்தனை சொத்திற்கு வழக்கு போட்டுள்ளீர்கள் என்றால் இரண்டு சொத்திற்கு வழக்கு போட்டுள்ளேன். மேற்படி இரண்டு சொத்துக்களும் கோவிலுக்கு சொந்தமான சொத்து என்றால் சரிதான். கோவிலுக்கு எனது அப்பா தான் பகுதிதாரர் என்றால் சரிதான். 1ம் அயிட்ட சொத்து 8720 சதுரடி உள்ளது. 1ம் அயிட்ட சொத்து என்பது கொத்தத்தெருவிற்கு வடக்கு புறத்தில் உள்ளது. 1ம் அயிட்டம் சொத்திற்கு வடக்கால் பெரியமாரிம்மன் கோவில் தெரு உள்ளது. அதற்கு வடக்கால் 2ம் அயிட்ட சொத்து உள்ளது அதன் அளவு 4200 சதுரடி உள்ளது. 1ம் அயிட்ட சொத்திற்கு நேர் பின்புறம் 2ம் அயிட்ட சொத்து வராது என்றால் சரிதான். சற்று மேற்கே தள்ளி வரும் என்றால் சரிதான். 4200 சதுரடிக்கு கிழக்கால் கோவிலுக்கு சொந்தமான மனை உள்ளது. அது எனது தகப்பனாருக்கும், எனது சித்தப்பாவிற்கும் சொந்தமானதாகும். அதிலும் கோவில் பகுதி உள்ளது என்றால் சரிதான்.

அந்த சொத்தின் கோவில் பகுதி யார் பெயரில் உள்ளது என்றால் எனது சித்தப்பா தீனதயாளன் பெயரில் உள்ளது. 2ம் அயிட்ட சொத்தினை சுற்றி வேலி அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.2ம் அயிட்ட சொத்தின் நான்கெல்லைகள்:– கிழக்கு தீனதயாளனின் சொத்து, மேற்கே ராஜேந்திரன் சொத்து. தெற்கே பெரியமாரியம்மன்கோவில் தெரு, வடக்கே ஏற்கனவே சந்துரு இருந்தார் தற்போது விற்றுவிட்டார். மேற்படி நான்கெல்லைக்குள் அமைந்துள்ள சொத்தின் நீள அகலம் என்னவென்றால் தெரியாது. மேற்படி நான்கெல்லைக்குள் 4200 சதுரடி இல்லை என்றாலும் 3500 சதுரடியும் சேர்ந்து உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி சொத்தினை அளந்து பார்த்தால் 7700 சதுரடி வரும் என்றால் இருக்கலாம். மேற்படி நான் கூறும் நான்கெல்லைக்குள் 3500 சதுரடி ஊழியமனையும் சேர்ந்து உள்ளது என்றால் சரியல்ல.

தாவா சொத்தினைஆணையர் நியமித்து அளந்து பார்க்க சம்மதமா என்றால் சம்மதம். கொத்தத்தெருவில் அமைந்துள்ள தாவா 1வது அயிட்ட சொத்தில் கீழ்புறத்தில் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் 2 மொட்டை மாடி வீடுகள் உள்ளது. அவை தனிதனியே உள்ளதா சேர்ந்தார்போல் உள்ளதா என்றால் சேர்ந்து உள்ளது. 2 வீடுகள் தவிர ரோட்டினை ஒட்டி முன்புறத்தில் 2 கடைகள் உள்ளது என்றால் சரிதான். இதுதவிர 1வது அயிட்ட சொத்தின் கீழ்புற பாதியில் கொல்லை பகுதியில் ஒரு RCC மாடி வீடு உள்ளது என்றால் சரிதான். அது உள்ளது எனது சொத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டினை எனது அப்பா கட்டவில்லை என்றால் சரிதான். பின்பக்கத்தில் 2000 சதுரடி வேலிஅமைத்து மேற்படி வீடு உள்ளது என்றால் சரிதான். ஆனால் எவ்வளவு சதுரடி என்று தெரியாது. மேற்படி வீட்டினை பாஸ்கர் என்பவர் கட்டினார் என்றால் சரிதான். அந்த வீடு கட்டி எவ்வளவு வருடங்கள் இருக்கும் என்றால் சுமார் 2, 3 வருடம் தான் இருக்கும்.

அந்த வேலி அமைப்புடன் கட்டப்பட்டுள்ள வீடு தாவா 1வது அயிட்டத்தின் ஒரு பகுதியாகும் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி மேற்படி சொத்தினை விற்று பாஸ்கர் கட்டினாரா என்றால் விற்றாரா என்று எனக்கு தெரியாது. அவரின் அனுமதியுடன் கட்டினார். மேற்படி சொத்தினை விற்றதற்கோ, பாஸ்கர் வீட்டினை கட்டியதற்கோ நான் ஏதேனும் கேள்வி கேட்டேனா என்றால் 1, 2 பிரதிவாதிகள் பணம் வாங்கிக்கொண்டு பாஸ்கரனை கட்டிடம் கட்ட அனுமதித்தனர். என்னுடைய இடத்தில் பாஸ்கர் வீடு கட்டியதற்கு ஏதேனும் ஆட்சேபனை தெரிவித்தீர்களா என்றால் தெரிவிக்கவில்லை. 1வது அயிட்ட கீழ்புற பாதியில் தரைதளத்தில் ஒரு வீட்டில் அம்மா வசித்து வருகிறார், மற்றொரு வீட்டை அழகப்பன் வாடகைக்கு விட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த வீட்டின் மாடியில் அழகப்பன் ஷெட் அமைத்து குடியுள்ளாரா என்றால் சரிதான். மேற்படி ஷெட் அமைத்து எத்தனை வருடங்கள் ஆகியுள்ளது என்றால் 2014ஆம் ஆண்டு அமைத்தார். மேற்படி விபரத்தை வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் தெரிவிக்கவில்லை.

1ம் அயிட்ட சொத்தின் மேற்புற பாதியில் ஏற்கனவே வீடாக உள்ளதா என்றால் சரிதான். அதில் முன் பகுதியில் நடுவில் பாதை அமைத்து இருபுறமும் இரண்டு கடைகள் 1ம் பிரதிவாதி ஆனந்தன் கட்டியுள்ளாரா என்றால் சரிதான். நடுவில் பாதை என்பது வீட்டிற்கு செல்வதற்காக என்றால் சரிதான். மேற்படி கடைகளை எந்த

வருடம் அமைத்தார் என்றால் 2017, 2018 இருக்கலாம். மாடி வீட்டிற்கு பின்புறம் ஒரு கூரை வீடு உள்ளதா என்றால் சரிதான் உள்ளது. அந்த கூரை வீடும் வாடகைக்கு விடப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். மேற்புற பாதியில் உள்ள இரண்டு கடைகளின் வாடகையும், பின் புறம் உள்ள கூரை வீட்டின் வாடகையையும் ஆனந்தன் வசூல் செய்து வருகிறாரா என்றால் ஆமாம். கீழ்புறத்தில் உள்ள இரண்டு கடை மற்றும் வீட்டின் வாடகையை 2 ம் பிரதிவாதி அழகப்பன் வசூல் செய்து வருகிறாரா என்றால் சரிதான். 1ம் அயிட்ட சொத்தினை சரிசமமாக பிரித்து நடுவில் சுவர் வைத்து கட்டியுள்ளரா என்றால் அண்ணன் இருவரும் வைத்துள்ளார்கள். அதனை வழக்கு தாக்கல் செய்வதற்கு எத்தனை வருடத்திற்கு முன்பு வைத்தார்கள் என்றால் 2021ல் நடுவில் சுவரை வைத்தார்.

மேற்படி 1ம் அயிட்ட சொத்தினை பொருத்து 1ம் பிரதிவாதிக்கும் 2ம் பிரதிவாதிக்கும் தனித்தனியாக கோவிலுக்கு பகுதி கொடுத்துள்ளார்களா என்றால் சரிதான். நான் கோவிலில் மேற்படி விபரத்தை தெரிவித்தேன் அவர்கள் பதில் கூறவில்லை. 1ம் அயிட்ட சொத்தில் மேற்புறத்தில் ஏற்கனவே இருந்த RCC கூரை பழுதடைந்ததால் ஆனந்தன் அதனை புதிதாக அமைத்தாரா என்றால் சரியல்ல. 2ம் அயிட்ட சொத்தின் முன்பகுதியில் தகர ஷீட் போடப்பட்ட வீட்டில் நான் வசித்து வருகிறேனா என்றால் சரிதான். அது அப்பா கட்டிய வீடாகும். அதில் 2000 சதுரடிக்கு வேலி அடைப்பு வைத்துள்ளேனா என்றால் சரியல்ல. 2வது அயிட்ட சொத்து மற்றும் ஊழிய மனை சேர்த்து கீழ்புறமாக 8 அடி அகலத்திற்கு பொது சந்து வைத்துக்கொண்டு நானும், அழகப்பன், ஆனந்தன், தவமணி பிரித்துகொண்டோம் என்றால் சரியல்ல. யார் இடத்தில் வேலை அடைப்பு உள்ளது என்றால் உள்ளது. தனிதனியாக வேலி அடைப்பு கிடையாது.

எனது அப்பா உயிருடன் இருக்கும்போதே 2010ல் எங்களுக்குள் பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ம் வது அயிட்டத்தினை பொறுத்து கீழ்புறம் அழகப்பன் அவர்களுக்கும், மேல்புறம் ஆனந்தன் அவர்களுக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அந்த அடிப்படையில் தான் கீழ்புறத்தின் பின்பகுதியில் 2000 சதுரடியை அழகப்பன் பாஸ்கரிடம் விற்றாரா என்பதும், கடைகளின் வாடகை, வீட்டின் ஒரு பகுதி வாடகை மற்றும் மேல்புறத்தில் ஷெட் அமைத்தார் என்றால் சரியல்ல. அதேபோல் மேற்படி பாகப்பிரிவினை அடிப்படையில் மேற்புறத்தில்

ஆனந்தன் முன்புறத்தில் இரண்டு கடைகளை கட்டி வாடகைக்கு விட்டு வாடகை பெற்றார் என்றாலும், பின்புறத்தில் கூரை வீட்டின் வாடகையை ஆனந்தன் பெற்று வருகிறார் என்றாலும், வீட்டின் RCC கூரையை புதிதாக அமைத்தார் என்றால் வாடகை பெற்று வருகிறார்கள் ஆனால் புதிதாக கூரை அமைக்கவில்லை, பாகப்பிரிவினையும் நடக்கவில்லை.

மேல்புறத்தின் பின்புறத்தில் உள்ள கூரை வீடு எனது தகப்பனார் அமைக்கவில்லை என்றாலும், ஆனந்தான் அமைத்தார் என்றாலும் சரியல்ல. நான் மேலே கூறியுள்ள நான்கெல்லை இரண்டு அயிட்டங்களுக்கும் தவறாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கிருஸ்துவ மதத்திற்கு மாறி எத்தனை மாதங்கள் ஆகிறது என்றால் நான் கிருஸ்தவ மதத்திற்கு மாறவில்லை. நான் எல்லா கடவுளையும் வணங்குகிறேன். செயிண்ட்பால் பள்ளிக்கு பக்கத்தில் உள்ள ரோமன் கத்தோலிக்க சர்ச்சில் நான் மதம் மாறி உறுப்பினராக சேர்ந்துள்ளேனா என்றால் இல்லை. நான் மதம் மாறியதால் எனக்கு பாக உரிமை கிடையாது என்றால் சரியல்ல. தாவாசொத்தினை விலைக்கு வாங்கிய பாஸ்கரை இந்த வழக்கில் வழக்காடியாக சேர்க்கவில்லை என்றால் அவர் விலைக்கு வாங்கவில்லை. தாவா இரண்டு அயிட்டங்கள் மற்றும் ஊழிய மனை கட்டு ஆகியவற்றை 2010 முதல் பிரித்து தனியாக அனுபவித்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே பிரிக்கப்பட்ட சொத்தினை மீண்டும் பிரிக்க இயலாது என்றால் பிரிக்கவே இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.